செ. வெ.எண். 38

நாள். 23.1.2020

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், நீலகிரி மாவட்டப் பிரிவு, உதகமண்டலம்.
மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட அளவு விளையாட்டுப் போட்டிகள் 2019-20.
செய்திக் குறிப்பு

2019–2020ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்ட 4 பிரிவினருக்கு வருகின்ற 28.01.2020 அன்று உதகை எப்ரான் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட உள்ளது.

1. கை, கால் ஊனமுற்றோர் (Physically Challenged – Orthopedically handicapped Men & Women)

அ. இறகுப்பந்து (ஒற்றையர் மற்றும் இரட்டையர்) ஒவ்வொரு அணியிலும் 5 வீரர்/வீராங்கனைகள் (Shuttle Badminton - Singles and Doubles) - Each team 5 Players.

ஆ. மேஜை பந்து (ஒவ்வொரு அணியிலும் 2 வீரர்/வீராங்கனைகள்) Table Tennis – each team 2 Players

இ. தடகளம்: அ) 50மீ ஓட்டம், ஆ) 100 மீ ஓட்டம், இ) குண்டு எறிதல், மற்றும் ஈ) 100 மீ வீல் சேர் பந்தயம்

2. பார்வையற்றோர் (Visually impaired – Total Blind & Partially sighted Men & Women)

அ. அடாப்டெட் வாலிபால் (ஒவ்வொரு அணியிலும் 7 வீரர் / வீராங்கனைகள்) Adopted Volleyball – each team 7 Players.

ஆ. தடகளம்: அ) 50மீ ஓட்டம், ஆ) 100 மீ ஓட்டம், இ) நின்ற நிலையில் தாண்டுதல், ஈ) குண்டு எறிதல் மற்றும் உ) டென்னிஸ் பந்து எறிதல்.

3. மனநலம் பாதிக்கப்பட்டவர் (Intellectually challenged – Mentally retarded Men & Women)

அ. எறிப்பந்து (ஒவ்வொரு அணியிலும் 7 வீரர்/வீராங்கனைகள்) Throw Ball – each team 7 Players

ஆ. தடகளம்: அ) 50மீ ஓட்டம், ஆ) 100 மீ ஓட்டம், இ) டென்னிஸ் பந்து எறிதல், ஈ) நின்ற நிலையில் தாண்டுதல் .

4. காது கேளாதோர் (Hearing impaired – Deaf Men & Women)

அ. கபாடி (ஒவ்வொரு அணியிலும் 7 வீரர்/வீராங்கனைகள்) Kabaddi – each team 7 players.

ஆ. தடகளம்: அ) 100மீ ஓட்டம், ஆ) 200 மீ ஓட்டம், இ) நீளம் தாண்டுதல், ஈ) குண்டு எறிதல் மற்றும் உ) 400மீ ஓட்டம்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்வதற்கு ஒவ்வொரு போட்டியாளரும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்று / மாவட்ட மறுவாழ்வு அதிகாரி அவர்களால் வழங்கப்பட்ட சான்று கண்டிப்பாக கொண்டுவருதல் வேண்டும். போட்டிகளில் கலந்துக்கொள்ள வயது வரம்பு கிடையாது. மாவட்ட அளவு போட்டிகளில் முதல் இடத்தை பெறுபவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க அனுப்பிவைக்கப்படுவார்கள்.

தடகள போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றிபெறுபவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் மற்றும் குழு விளையாட்டுப் போட்டியில் முதல் 2 இடங்களில் வெற்றிபெறுபவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இவ்வாறு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஒம்/- .....
மாவட்ட ஆட்சித் தலைவர்,
நீலகிரி

/உண்மை நகல்/

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
நீலகிரி மாவட்டம்